ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மானமுடைத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மானமுடைத்து ॥

## கண்ணனது செய்தியைக் குறித்து யசோதை பணித்தலும் ஆய்ச்சியர் முறையிடுதலும்

‡மானம் உடைத்துங்கள் ஆயர் குலம்
    அதனால்⋆ பிறர் மக்கள் தம்மை⋆
ஊனம் உடையன செய்யப் பெறாய் என்று⋆
    இரப்பன் உரப்பகில்லேன்⋆
நானும் உரைத்திலேன் நந்தன் பணித்திலன்⋆
    நங்கைகாள்! நான் என் செய்கேன்⋆
தானும் ஓர் கன்னியும் கீழை அகத்துத்⋆
    தயிர் கடைகின்றான் போலும் (1)

காலை எழுந்து கடைந்த இம்மோர் விற்கப்
    போகின்றேன்⋆ கண்டே போனேன்⋆
மாலை நறுங்குஞ்சி நந்தன் மகன் அல்லால்⋆
    மற்று வந்தாரும் இல்லை⋆
மேலை அகத்து நங்காய்! வந்து காண்மின்கள்⋆
    வெண்ணெயே அன்றிருந்த⋆
பாலும் பதின் குடம் கண்டிலேன்⋆ பாவியேன்
    என் செய்கேன் என் செய்கேனோ (2)

தெள்ளிய வாய்ச் சிறியான் நங்கைகாள்!⋆
    உறி மேலைத் தடா நிறைந்த⋆
வெள்ளி மலையிருந்தால் ஒத்த வெண்ணெயை⋆
    வாரி விழுங்கியிட்டு⋆
கள்வன் உறங்குகின்றான் வந்து காண்மின்கள்⋆
    கையெல்லாம் நெய்⋆ வயிறு
பிள்ளை பரம் அன்றிவ்வேழுலகும் கொள்ளும்⋆
    பேதையேன் என் செய்கேனோ (3)

மைந்நம்பு வேல் கண் நல்லாள்⋆ முன்னம் பெற்ற
வளை வண்ண நல் மா மேனி⋆
தன் நம்பி நம்பியும் இங்கு வளர்ந்தது⋆
அவன் இவை செய்தறியான்⋆
பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம்⋆
பொதியறை போகின்றவா தவழ்ந்திட்டு⋆
இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க்குய்வில்லை⋆
என் செய்கேன் என் செய்கேனோ (4)

தந்தை புகுந்திலன் நான் இங்கிருந்திலேன்⋆
தோழிமார் ஆரும் இல்லை⋆
சந்த மலர்க் குழலாள்⋆ தனியே
விளையாடும் இடம் குறுகி⋆
பந்து பறித்துத் துகில் பற்றிக் கீறிப்⋆
படிறன் படிறு செய்யும்⋆
நந்தன் மதலைக்கிங்கென் கடவோம் நங்காய்!⋆
என் செய்கேன் என் செய்கேனோ (5)

மண்மகள் கேள்வன் மலர் மங்கை நாயகன்⋆
நந்தன் பெற்ற மதலை⋆
அண்ணல் இலைக் குழல் ஊதி நம் சேரிக்கே⋆
அல்லில் தான் வந்த பின்னை⋆
கண்மலர் சோர்ந்து முலைவந்து விம்மிக்⋆
கமலச் செவ்வாய் வெளுப்ப⋆
என்மகள் வண்ணம் இருக்கின்றவா நங்காய்!⋆
என் செய்கேன் என் செய்கேனோ (6)

ஆயிரம் கண்ணுடை இந்திரனாருக்-
கென்று⋆ ஆயர் விழவெடுப்ப⋆
பாசனம் நல்லன பண்டிகளால்⋆ புகப்
பெய்த அதனை எல்லாம்⋆
போயிருந்தங்கொரு பூத வடிவு கொண்டு⋆
உன் மகன் இன்று நங்காய்⋆

மாயன் அதனை எல்லாம் முற்ற⋆ வாரி
    வளைத்துண்டிருந்தான் போலும் (7)

தோய்த்த தயிரும் நறு நெய்யும் பாலும்⋆
    ஓர் ஓர் குடம் துற்றிடும் என்று⋆
ஆய்ச்சியர் கூடி அழைக்கவும்⋆ நான் இதற்-
    கெள்கி இவனை நங்காய்⋆
சோத்தம் பிரான்! இவை செய்யப் பெறாய் என்று⋆
    இரப்பன் உரப்பகில்லேன்⋆
பேய்ச்சி முலையுண்ட பின்னை⋆ இப்-
    பிள்ளையைப் பேசுவதஞ்சுவேனே (8)

ஈடும் வலியும் உடைய⋆ இந்நம்பி
    பிறந்த ஏழு திங்களில்⋆
ஏடலர் கண்ணியினானை வளர்த்தி⋆
    யமுனை நீராடப் போனேன்⋆
சேடன் திருமறு மார்வன்⋆ கிடந்து
    திருவடியால்⋆ மலை போல
ஓடும் சகடத்தைச் சாடிய பின்னை⋆
    உரப்புவதஞ்சுவேனே (9)

அஞ்சுவன் சொல்லி அழைத்திட நங்கைகாள்!⋆
    ஆயிர நாழி நெய்யைப்⋆
பஞ்சியல் மெல்லடிப் பிள்ளைகள் உண்கின்ற⋆
    பாகம் தான் வையார்களே⋆
கஞ்சன் கடியன் கறவெட்டு நாளில்⋆ என்
    கை வலத்தாதும் இல்லை⋆
நெஞ்சத்திருப்பன செய்து வைத்தாய் நம்பீ!⋆
    என் செய்கேன் என் செய்கேனோ (10)

அங்ஙனம் தீமைகள் செய்வர்களோ
    நம்பீ!⋆ ஆயர் மட மக்களைப்⋆
பங்கய நீர் குடைந்தாடுகின்றார்கள்⋆
    பின்னே சென்றொளித்திருந்து⋆

அங்கவர் பூந் துகில் வாரிக்கொண்டிட்-
டரவேர் இடையார் இரப்ப⋆
மங்கை நல்லீர்! வந்து கொண்மின் என்று⋆
மரம் ஏறி இருந்தாய் போலும் (11)

அச்சம் தினைத்தனை இல்லை இப்பிள்ளைக்கு⋆
ஆண்மையும் சேவகமும்⋆
உச்சியில் முத்தி வளர்த்தெடுத்தேனுக்கு⋆
உரைத்திலன் தான் இன்று போய்⋆
பச்சிலைப் பூங்கடம்பேறி⋆ விசை கொண்டு
பாய்ந்து புக்கு ஆயிர வாய்
நச்சழல் பொய்கையில் நாகத்தினோடு⋆
பிணங்கி நீ வந்தாய் போலும் (12)

தம்பரம் அல்லன ஆண்மைகளைத்⋆
தனியே நின்று தாம் செய்வாரோ
எம்பெருமான்! உன்னைப் பெற்ற வயிறுடையேன்⋆
இனி யான் என் செய்கேன்⋆
அம்பரம் ஏழும் அதிரும் இடி குரல்⋆
அங்கனல் செங்கண் உடை⋆
வம்பவிழ் கானத்து மால் விடையோடு⋆
பிணங்கி நீ வந்தாய் போலும் (13)

‡அன்ன நடை மட ஆய்ச்சி வயிறடித்து
அஞ்ச⋆ அருவரை போல்⋆
மன்னு கருங்களிற்றாருயிர் வவ்விய⋆
மைந்தனை மா கடல் சூழ்⋆
கன்னி நல் மா மதிள் மங்கையர் காவலன்⋆
காமரு சீர்க் கலிகன்றி⋆
இன்னிசை மாலைகள் ஈரேழும் வல்லவர்க்கு⋆
ஏதும் இடர் இல்லையே (14)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖